**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நன்னிலம்**

**முன்னிலை:** திரு. M.S.பாரதிதாசன், M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நன்னிலம்.

2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைக்கால மனு எண். 154/2019**

**in**

**அசல் வழக்கு எண். 57/2019**

**CNR.No. TNTV08-001330-2019**

முருகேசன் .... மனுதாரர் /வாதி

/எதிர்/

செந்தில் .... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

------

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. பழனிராஜா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G.V.S. பாண்டியன், அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனு மீது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரரின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ எவ்வித இடையூறு செய்யக்கூடாதென அசல் வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க உத்தரவிட வேண்டி கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்** :-

1. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனு சொத்து மாப்பிள்ளைக்குப்பம் அகரத்தெருவில் அமைந்துள்ள புதிய புல எண்.321.5, பழைய புல எண்.50-13 ல்

உள்ள 0.04 செண்டில் உள்ள 0.04.0 ஏர்ஸ் நடைபாதை என்றும், மேலும் அதில் உள்ள மூங்கில்கொத்து என்றும், மனுதாரர் மனு சொத்தினை கடந்த 12.09.1993-ம் ஆண்டு கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து கிரயம் பெற்று நன்னிலம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.597/1993 ஆக பதிவு செய்யப்பட்டு மனுதாரர் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், மனு சொத்தான நடைபாதையும் இந்த எதிர்மனுதாரருக்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றும், மனு சொத்தில் வேண்டுமென்றே எதிர்மனுதாரரால் வளர்க்கப்பட்டு வரும் மூங்கில் கொத்தால் மனுதாரரின் வசதியுரிமை மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளது என்றும், மனு சொத்து வழியாகத்தான் மனுதாரர் வெளியேறி வெளியிலே அல்லது மெயின்ரோட்டிற்கோ வெளியே பொருட்களை வாங்கி செல்ல இயலும் என்றும், மனு சொத்து பாதையை மனுதாரர் தினம் தினம் தடையின்றி செல்வதையும் மனுதாரர் வசதியுரிமையை தடுக்கும் விதமாக எதிர்மனுதாரர் தாவா பாதையை ஆக்ரமனம் செய்ய முயற்சித்து வருகிறார் என்றும், மேலும் அதில் மூங்கில் கொத்தையும் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக வளர்த்து வருகிறார் என்றும், எனவே, மனு சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தை எதிர்மனுதாரரோ அவரது ஆட்களோ, முகவர்களோ, உறவினர்களோ எவ்வித ஆக்ரமணம் செய்யாமல் இருக்கும் வகையில் அசல் வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிருரையின் சுருக்கம்</u>** :-

2. எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் கூறியுள்ள அதே காரணங்களை இம்மனுவின் எதிருரையாக பாவித்துக்கொண்டு இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், புல எண்.321/5 என்பதை நடைபாதை என்று வருவாய்

கணக்குகளில் உள்ளது என்றும், அதன் பழைய புல எண்.50/23 என்றும், அதில் இந்த எதிர்மனுதாரர் மூங்கில்குத்து பயிரிடவில்லை என்றும், மனுதாரர் கிரயம் பெற்றதாக கூறும் சாசனப்பத்திரத்தில் வழக்கு சொத்து விவரத்தில் கொடுக்கப்பட்டுள்ள நான்கெல்லைக்குள் நான்கு செண்ட் மட்டுமே என கூறுவது தவறு என்றும், அதில் சுமார் 13 செண்டுக்கு அதிகமாக உள்ளது என்றும், புல எண்.321/10 ன் வடபுறம் வாய்க்காலுக்கு அடுத்து தெற்கில் கைலாச தேவருக்கு அனுபவ உரிமை இருந்து அதனை 08.05.2010-ல் அருணாச்சல முதலியார் 3 செண்ட் நிலத்தை பதிவான கிரய சாசனம் மூலம் கிரயம் செய்து கொடுத்து அனுபவித்து வருகிறார் என்றும், மனுதாரர் கிரயம் பெற்ற 4 செண்டிற்கு அடுத்து தெற்கில் இருப்பது இந்த எதிர்மனுதாரருக்கு சொந்தமான 5 குழி நிலம் என்றும், இந்த எதிர்மனுதாரர் அனுபவித்து வரும் சொத்திற்கு அடுத்து தெற்கு புல எண் 321/5 ல் பழைய புல எண்.50/23 உள்ளது என்றும், எனவே, வழக்கு நான்கெல்லைக்குட்பட்ட சொத்தில் மனுதாரருக்கு மட்டும் சொத்து உள்ளதாக கூறியிருப்பது தவறு என்றும், மேற்படி நான்கெல்லைக்குள் இந்த எதிர்மனுதாரர் குடும்பத்திற்கும் வேறு இரண்டு நபர்களுக்கும் உரிமை அனுபவமுடையது என்றும், 04.07.2019-ல் இந்த எதிர்மனுதாரர் வழக்கு சொத்தில் பிரச்சனை செய்தார் என்பது கற்பனையானது என்றும், புல எண்.321/5 ல் உள்ள நடைபாதையில் எதிர்மனுதாரர் மூங்கில் குத்து இல்லை என்றும், எனவே, மனுதாரர் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இரு தரப்பிலும் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை</u> :-**

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவில் மனுதாரர் கோரியுள்ள இடைக்கால தடைஉறுத்துக்கட்டளை அவருக்கு கிடைக்கத்தக்கதா என்பதே ஆகும்.

**தீர்வு** :-

5. மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், மனுவில் கூறியுள்ள சங்கதிகளை எடுத்துரைத்தும் இந்த மனுதாரரின் அனுபவத்தில் உள்ள மனு சொத்தில் எதிர்மனுதாரரோ, அவரது ஆட்களோ, அவர்களது உறவினர்களோ, எவ்விதத்திலும், அத்துமீறி பிரவேசித்து இடையூறு செய்யக்கூடாதென இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

6. எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை எதிர்வாதமாக எடுத்துரைத்து அதன்காரணங்களினால் மனுதாரர் கோரியுள்ள இடைக்கால தடையுறுத்துக்கட்டளை அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், அதனால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இம்மனுவின் மனுதாரர் மனுச்சொத்தை கிரயம் பெற்று அனுபவித்து வருவதாகவும், அதற்கு வீட்டு வரி ரசீது, மின்சார கட்டண ரசீது ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் அவரது அனுபவத்தில் இடையூறு செய்வதாகவும், மூங்கில் மரம் வளர்த்து அவரது அமைதியான அனுபவத்தை இடையூறு செய்வதாகவும் காரணம் கூறி இடைக்கால தடையுறுத்துக்கட்டளை கோருகிறார். அதற்கு மாற்றாக, எதிர்மனுதாரர் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து மனுச் சொத்தில் நடைபாதை அமையவில்லை என்றும், அதுவேறு புல எண்ணில் அமைந்துள்ளது என்றும், மனுதாரர் கூறுவதுபோல் புல எண்.321 என்பதற்கு பழைய புல எண்.50/13 இல்லை என்றும், அதன் உண்மையான பழைய புல எண்.50/23 என்று கூறியும், மனு சொத்தின் அளவானது தவறாக மனுதாரரால் கூறப்பட்டுள்ளது என்றும், அதன் நான்கெல்லையும் தவறு என்றும், நடைபாதையில் மூங்கில் குத்து இல்லை என்றும், மனுதாரர் கூறுவது போல் அவர் மனு சொத்தில் உடைமையில் இல்லை என்றும் கூறி மனுவை தள்ளுபடி செய்ய கோருகிறார். எனவே,

அவர்களது வாதங்களை பரிசீலனை செய்கையில், பிரச்சனைக்குரிய நிலம் யார் அனுபவத்தில் உள்ளது என்பதை பற்றியும், அதன் நான்கெல்லைகள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும், அதன் புல எண்கள் சரியானதுதானா என்பதும், எந்த ஆவணத்தின் மூலம் அவர்களுக்கு தாவா சொத்தில் உரிமை ஏற்படுகிறது என்ற விபரங்கள் வழக்கின் விசாரணையின் போது சாட்சியங்களின் அடிப்படையிலும், தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் அடிப்படையிலும் அவற்றின் சாட்சியத்தன்மை அடிப்படையிலும் முடிவு செய்யப்பட வேண்டியது என்பதாலும் மேற்படி விபரங்கள் இரு தரப்பு சாட்சியத்திலிருந்து தான் முடிவு செய்ய இயலும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இதில் உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக வழக்கு சொத்தின் உரிமை யாரிடத்தில் உள்ளது என்பது பற்றியும், யார் அதில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்பது பற்றி முடிவு செய்யப்படும் பட்சத்தில் அது அசல் வழக்கிற்கு முடிவு காண்பது போல் ஆகும் என்பதாலும், இம்மனுவானது கடந்த 2019-ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருவதாலும், அசல் வழக்கே தற்போது விசாரணை நிலையில் உள்ளதாலும், இம்மனுவில் முடிவு செய்வது நீதிக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

8. முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ஆம் நாள் என்னால் இவ்வவையறியப்பகரப்பட்டது.

(S/d. M.S. பாரதிதாசன், M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

**மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், சான்றாவணங்கள்:-**

- இல்லை -

**எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சான்றாவணங்கள் :-**

- இல்லை -

(S/d. M.S. பாரதிதாசன், M.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.